## வாலாஜாபேட்டை நகராட்சி

### 2024ம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்

| மன்றகூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 30.09.2024 | பொருள் எண்.1<br>நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | நகரமன்ற தீர்மானம் எண். 565 மன்றம் அனுமதிக்கப்பட்டது. |
| 30.09.2024 | பொருள் எண்.2<br>நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | நகரமன்ற தீர்மானம் எண். 566 மன்றம் அனுமதிக்கப்பட்டது. |
| 30.09.2024 | <u>பொருள் எண். 3</u><br>வாலாஜாபேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.9, நகராட்சி இருபாலர் நடுநிலைப்பள்ளியில் புதியதாக கழிவறை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.15.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :-</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. 2024-2025-ம் ஆண்டு வரவு செலவுதிட்டத்தில் சேர்த்து கல்விநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>(ந.க.எண்.1553/2024/இ1)</u> | நகரமன்ற தீர்மானம் எண். 567 மன்றம் அனுமதிக்கப்பட்டது. |
| 30.09.2024 | <u>பொருள் எண். 4</u><br>வாலாஜாபேட்டை நகராட்சி வன்னிவேடு கிராமத்தில் நகராட்சிக்கு சொந்தமான உரகிடங்கு வளாகத்தில் கசடு கழிவு மேலாண்மை நிலையம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (FSTP/STP) அமைத்திட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க உரிய கலந்தாலோசகர் (consultant) நியமித்து (மதிப்பீட்டு தொகையில் 2 சதவீகிதத்திற்கு மிகாமல்) தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :-</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. 2024-2025-ம் ஆண்டு வரவு செலவுதிட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>(ந.க.எண்.1554/2024/இ1)</u> | நகரமன்ற தீர்மானம் எண். 568 மன்றம் அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 30.09.2024 | <u>பொருள் எண். 5</u><br>வாலாஜாபேட்டை நகராட்சி வன்னிவேட்டில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து கடப்பரங்கையன் தெரு, ஆற்காடு தெத்து தெரு மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மூலமாக 24 வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்கு சீரான பாதுக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை குடிநீர் தொட்டிகள், தரைமட்ட நீர்தேக்க தொட்டிகள், பிரதான குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்கள் சுமார் 50 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டவை ஆகும். தற்போது மேல்நிலை குடிநீர் தொட்டிகள் பழுதடைந்துள்ளது. பிரதான குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்கள் பழுதடைந்து குடிநீர் வினியோகம் பாதிப்புள்ளாகிறது. எனவே இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள், தரைமட்ட நீர்தேக்க தொட்டிகள், பிரதான குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்கள் புதியதாக அமைத்திட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க உரிய கலந்தாலோசகர் நியமித்து (மதிப்பீட்டு தொகையில் 2 சதவீகிதத்திற்கு மிகாமல்) தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :-</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. 2024-2025-ம் ஆண்டு வரவு செலவுதிட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>(ந.க.எண்.1555/2024/இ1)</u> | நகரமன்ற தீர்மானம் எண். 569 மன்றம் அனுமதிக்கப்பட்டது. |
| 30.09.2024 | <u>பொருள் எண். 6</u><br>வாலாஜாபேட்டை நகராட்சியில் Capital Grant Fund (CGF) திட்டம் 2023-2024 Improvement of existing water supply scheme for Walajapet Municipality at Vannivedu Head Works பணிக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு செலவின தொகை ரூ.26,093/-ஐ M/s. சிரேஷ்டா கம்யூனிகேஷன் சென்னை - 17 என்ற நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u> :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. 2022-2023ஆம் ஆண்டு வரவு செலவுதிட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1567/2024/இ1) | நகரமன்ற தீர்மானம் எண். 570 மன்றம் அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 30.09.2024 | <u>பொருள் எண். 7</u><br>இந்நகராட்சியின் 2022-2023ம் ஆண்டு தணிக்கை செய்த வகையில் தணிக்கை கட்டணம் ரூ.71,754/- செலுத்த வேண்டும் என தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தணிக்கை கட்டணம் ரூ.71,754/-ஐ பொதுநிதியில் இருந்து சம்மந்தப்பட்ட அரசு தலைப்பில் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. இச்செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.600/2012/சி1) | நகரமன்ற தீர்மானம் எண். 571 மன்றம் அனுமதிக்கப்பட்டது, |
| 30.09.2024 | <u>பொருள் எண். 8</u><br>இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள், நிலங்கள், காலிமனைகள், சேமிப்பு கட்டமைப்புகள் மற்றும் தொலைதொடர்பு உயர்கோபுரங்கள் ஆகியவற்றுக்கான வருடாந்திர மதிப்பினை, சொத்துவரி சீராய்வு செய்யப்படும் ஆண்டுகளை தவிர்த்து, ஒவ்வொரு வருடமும் 6% சதவீதம் உயர்வு செய்யப்படும் என பிறப்பிக்கப்பட்ட எண்.113, நாள்:05.09.2024 நகராட்சி நிர்வாக துறையின் எண்ணிட்ட அரசாணையும்,<br>அதனை தமிழ்நாடு அரசிதழில் விளம்பரப் படுத்தப்பட்டமைக்கான அரசிதழ் எண்.284 நாள்.05.09.2024ஐயும் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்:1521/2024/அ1) | நகரமன்ற தீர்மானம் எண். 572 மன்றம் அனுமதிக்கப்பட்டது, |
| 30.09.2024 | <u>பொருள் எண். 9</u><br>வாலாஜாபேட்டை நகராட்சியில் உள்ள சாலையோர வியாபாரிகள் நகர விற்பனைகுழு உறுப்பினர்களுக்கான தேர்தல் விளம்பரம் தினமணி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான கட்டணம் ரூ.8,568/- வழங்க பட்டியல் வரப்பெற்றுள்ளது, இத்தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. இச்செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.987/2024/எப்1) | நகரமன்ற தீர்மானம் எண். 573 மன்றம் அனுமதிக்கப்பட்டது, |

| | | |
|---|---|---|
| 30.09.2024 | **<u>பொருள் எண். 10</u>**<br>வாலாஜாபேட்டை நகராட்சி மீது திரு.கோபால், குணாளன் த/பெ. கோபால், 2)ஜெயஸ்ரீ, க/பெ. கோபால், 3)மோகன், த/பெ.கோபால் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. வழக்கு எண்.C.M.P.No:27603- 2023, S.A. Sr.No:8194- 2022 வழக்கினை வாலாஜாபேட்டை நகராட்சி சார்பாக வாதிட்ட சென்னை உயர்நீதிமன்ற கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.ப.பரணிதரன், அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.30,000/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. இச்செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.446/2024/எப்1) | நகரமன்ற தீர்மானம் எண். 574 மன்றம் அனுமதிக்கப்பட்டது, |
| 30.09.2024 | **<u>பொருள் எண். 11</u>**<br>வாலாஜாபேட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 24 வார்டுகளில் கொசுக்களால் பரவக்கூடிய டெங்கு, சிக்கன் குனியா, மலேரியா போன்ற நோய்களை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க "கயல் மகளிர் சுய உதவி குழு" மூலம் 16 DBC பணியாளர்கள் ஜூலை 01.07.2024 முதல் செப்டம்பர் 30.09.2024 தேதி வரை மூன்று (3) மாதங்கள் 92 நாட்களுக்கு பணியினை தொடர்ந்து செய்து வரும் நிலையில் 30.09.2024 தேதி வரை பணிகாலம் முடிவடைவதால் தற்பொழுது பெய்து வரும் பருவ மழையின் காரணமாக நமது மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் சற்று அதிகரித்து வருவதால், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு துறை, மாவட்ட சுகாதார அலுவலர், இராணிப்பேட்டை மாவட்டம் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் ந.க.எண். 145/இ5/2024 நாள். 19.08.2024 இந்நகராட்சி பகுதிகளில் உள்ள மொத்த (8192) வீடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் வாரத்தில் ஒருமுறை அனைத்து வீடுகளிலும் கொசுப் புழு பரிசோதனை செய்யும் DBC பணியாளர்கள் 1 நபர் 50 வீடுகள் 6 நாட்கள் = 1x50x6=300 வீடுகள் என்ற அடிப்படையில் பணி செய்ய வேண்டியுள்ளதால் ஏற்கனவே உள்ள DBC | நகரமன்ற தீர்மானம் எண். 575 மன்றம் அனுமதிக்கப்பட்டது, |

<table>
<tr><td></td><td>பணியாளர்கள் மேலும் கூடுதலாக மொத்தம் = 16+11=27 DBC பணியாளர்கள் 01.10.2024 அக்டோபர் மாதம் முதல் 31.12.2024 டிசம்பர் மாதம் 92 நாட்கள் (3 மூன்று) மாதங்கள் தொடர்ந்து பணியினை மேற்கொள்ள நாள் ஒன்றுக்கு ரூ.329/- வீதம் 27 பணியாளர்கள் 92 நாட்கள் 27x329x92= ரூ.8,17,236/- அதற்கான செலவு தொகை ரூபாய் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. 2024-2025 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1477/2024/எச்1)</td><td></td></tr>
<tr><td>30.09.2024</td><td><u>பொருள் எண். 12</u><br>வாலாஜாபேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் பொதுமக்கள் நலன் கருதி பொது சுகாதார பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் கொசு ஒழிப்புக்காக பயன்படுத்தப்படும் கொசுப் புகை மருந்து இயந்திரம் (Jet Fogging Machine) ஒன்று (1) எண்ணிக்கை பழுது ஏற்பட்ட நிலையில் இருந்த கொசு புகை மருந்து தெளிப்பான் இயந்திரம் ந.க.எண்.552, நாள்.30.08.2024 ஆம் தேதி நகர மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. எண்ணிக்கை (2) மற்றொரு 5 லிட்டர் (Jet Fogging Machine) தற்போது திடீர் என்று பழுது ஏற்பட்டு தற்சமயம் இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே நகர பகுதியில் கொசு ஒழிப்பு பணி பருவமழை துவங்கிய நிலையில் உள்ளதால் அவசரம், அவசியம் கருதி பழுது நீக்க வேண்டி உத்தேச செலவின தொகை ரூ.9,000/- ஆகும் என்பதால் இப்பணியை உடனே மேற்கொள்ளவும் இத்தொகையினை வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது நிதியில் இருந்து செலவினத்தை மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண்.1144/2024/எச்1)</td><td>நகரமன்ற தீர்மானம் எண். 576 மன்றம் அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>30.09.2024</td><td><u>பொருள் எண். 13</u><br>வாலாஜாபேட்டை நகராட்சியில் உள்ள 24 வார்டுகளில் பொது சுகாதார பிரிவில் உள்ள தூய்மைப் பணியாளர்கள் ஆண்கள்-13 மற்றும் பெண்கள்-9 = 22 எண்ணிக்கை தூய்மைப் பணி மேற்பார்வையாளர்கள்-3,</td><td>நகரமன்ற தீர்மானம் எண். 577 மன்றம் அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>(MCC) நுண்ணுர செயலாக்க மையங்களிலும், நகரில் உள்ள மழைநீர் வடிகால்வாய்களில் உள்ள அடைப்பு சரிசெய்யும் பணிகள் தினமும் மேற்கொண்டு வருகின்றனர், தூய்மைப் பணியாளரின் பாதுகாப்பு நலன், அவசியம் கருதி மற்றும் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கையாக பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி பயன்படுத்திக் கொள்ள உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>பொருள்</th><th>எண்ணிக்கை</th></tr>
<tr><td>1</td><td>கை உறை (காட்டன் & சிந்தெடிக் மிக்ஸ்டு)</td><td>500</td></tr>
<tr><td>2</td><td>காலுறை ( Comboot Spl)</td><td>10</td></tr>
<tr><td>3</td><td>ஒளிரும் சட்டை (Reflective Jacket)</td><td>22</td></tr>
<tr><td>4</td><td>மழை கோட் (Rain Coat)</td><td>25</td></tr>
<tr><td>5</td><td>Plastic Sprayer<br>(கொசுபுழு (BT) மருந்து தெளிப்பான்<br>இயந்திரம் 2 எண்ணிக்கை)</td><td>2</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு:</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பொது நிதியில் இருந்து செலவினத்தை மேற்கொள்ளலாம்.<br>
(ந.க.எண். 1146/2024/எச்1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.09.2024</td>
<td><u>பொருள் எண். 14</u><br>
இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் தூய்மை பணியாளர்கள் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், அலுவலக உதவியாளர்கள், குடிநீர் விநியோகிக்கும் பணியாளர்கள், மின்பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு 2024–2025ம் ஆண்டிற்கான சீருடைகள் கோ–ஆப்டெக்ஸ் கூட்டுறவு லிமிடெட், வேலூர் என்ற நிறுவனத்திடமிருந்தும், சீருடைகள் தைப்பதற்கான தையற்கூலி, காலணிகள் ஆகியவற்றிக்கான தோராய செலவினத் தொகை ரூ.2.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலகக் குறிப்பு</u><br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
2. இச்செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.655/2022/எச்1)</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண். 578 மன்றம் அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

30.09.2024

<u>பொருள் எண். 15</u>

வாலாஜாபேட்டை நகராட்சியில் உள்ள 24 வார்டுகளில் பொது சுகாதார பிரிவின் மூலமாக DBC களப்பணியாளர்களைக் கொண்டு தற்சமயம் பருவமழை தொடங்கிய நிலையில் தீவிர கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது தற்சமயம் இருப்பு குறைவாக உள்ள காரணத்தினால் பொது மக்கள் நலன் அவசியம், அவசரம் கருதி கீழ்கண்ட பொருட்களை அரசு பதிவு பெற்ற நிறுவனத்திடமிருந்து வாங்கி பயன்படுத்திக்கொள்ள தோராய செலவினம் ரூ.2.00 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | டெமிபாஸ் 50% EC | 25 லிட்டர் |
| 2 | நிலவேம்பு பவுடர் | 10 கிலோ |
| 3 | Bacto Power – BTI Liquid | 20 லிட்டர் |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதியில் இருந்து செலவினத்தை மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.1145/2024/எச்1)

நகரமன்ற தீர்மானம் எண். 579 மன்றம் அனுமதிக்கப்பட்டது.

(ஓம்) ஹரிணி தில்லை
நகரமன்ற தலைவர்,
வாலாஜாபேட்டை நகரமன்றம்.

//உண்மை நகல்//

ஆணையாளர் (மு.கூ.பொ),
வாலாஜாபேட்டை நகராட்சி